கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**அமர்வு வழக்கு எண். 375/2021**

**அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நதியா | சாதி | |
| த/பெ. | ஐயப்பன் | மதம் | |
| கிராமம் | சிவபெருமான்பாளையம் | தொழில் | |
| தாலுக்கா | விக்ரவாண்டி | வயது | 32/2022 |
| மாவட்டம் | | தேதி | 06.12.2022 |

( 06.12.2022) இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுவை மாநிலம் பண்டசோழன் நல்லூர் கிராமத்தில் எனது தாய்வீட்டில் குடியிருந்து வருகிறேன். விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். 2021ம் வருடம் எனது மாமியார் வீடான சிவபெருமான்பாளையத்தில் எனது கணவருடன் குடியிருந்து வந்தேன். இந்த வழக்கில் இறந்துபோன ஐயப்பன் எனது கணவர். ஆஜர் எதிரிகள் மற்றும் 3வது எதிரி குமாரவேல் ஆகியோரை எனக்கு தெரியும். 2 வது எதிரி சரவணன், 4 வது எதிரி ஜானகி ஆகியோர் எனது கணவரின் பெரியப்பா பிள்ளைகள். 1வது சரத்குமார் 2 வது எதிரியின் மகன். 3 வது எதிரி 4 வது எதிரியின் கணவர். 2 வது எதிரி சரவணனின் மனைவியான விஜயகுமாரி என்பவர் என்னை பற்றி எனது கணவரிடம் தவறாக சொல்லிவிட்டார். அதனால் எனது கணவர் என்னிடம் சண்டை போட்டு வந்தார். அதனால் நான் எனது பிள்ளைகளை அழைத்து கொண்டு எனது அம்மா வீட்டிற்கு பண்டசோழ நல்லூர் சென்றுவிட்டேன். எங்கள் வீட்டிற்கு பக்கத்தில்தான் சரவணன் வீட்டார் மாடுகளை கட்டுவார்கள். விஜயகுமாரி மாடு கட்டும்போது எனது கணவர் நீ எனது மனைவியை பற்றி தவறாக சொன்னதால்தான் சண்டை வந்து எனது மனைவி பிரிந்து சென்றுவிட்டாள் என்று சொல்லி எனது கணவர் விஜயகுமாரியிடம் சண்டை போட்டுள்ளார். எனது கணவர் தள்ளிவிட்டதில் விஜயகுமாரிக்கு தலையில் அடிபட்டது. எனது கணவர் எனது அண்ணனுக்கு போன் செய்து சண்டை வந்ததாகவும், தான் தள்ளி விட்டதில் விஜயகுமாரிக்கு அடிபட்டதாகவும் சொன்னார். அதனால் எனது அண்ணன் ஜெயகணேஷ் என்னை அழைத்து கொண்டு வந்து எனது கணவர் வீட்டில்

விட்டுவிட்டார். எனது கணவர் நடந்த சம்பவத்தை என்னிடம் சொன்னார். 22.04.2021ம் தேதி சாயந்திரம் 6, 7 மணியளவில் எனது கணவர் வீட்டை விட்டு வெளியே சென்றார். அன்று இரவு முழுவதும் வரவில்லை. மறுநாளும் வரவில்லை. எனவே நான் காலையிலேயே எனது தாய் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அங்கு இருந்துவிட்டு எனது கணவர் குறித்த தகவல் இல்லாததால் மறுநாள் எனது அண்ணனை அழைத்து கொண்டு எனது கணவர் வீட்டிற்கு வந்தேன். வீட்டில் எனது கணவரும் இல்லை. 25.04.2021ம் தேதி மதியம் 12.00 மணியளவில் எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள விநாயகர் கோவில் அருகில் சத்தம் கேட்டது. அதனால் நான் வீட்டில் இருந்து அங்கு ஓடி சென்று பார்த்தேன். முனியம்மாள் புதிதாக கட்டி வந்த வீடு அருகில் வைத்து சரத்குமார், சரவணன், ஜானகி, குமாரவேல் ஆகியோர் எனது கணவரை மடக்கி எதிரி சரத்குமார் தன் கையில் வைத்திருந்த கட்டில் காலால் எனது கணவரின் தலையின் பின்புறம் அடித்தார். 2 வது எதிரி சரவணன் நட்டு கழற்ற உதவும் ஸ்பேனரால் எனது கணவரின் வாயில் அடித்து எனது கணவரின் பல் எல்லாம் கொட்டி விட்டது. எனது கணவரின் கையிலும் எதிரி சரவணன் ஸ்பேனரால் அடித்தார். நான் போய் தடுத்தேன். அப்போது 3 வது எதிரி குமாரவேல், 4 வது எதிரி ஜானகி என்னை மறித்து தள்ளிவிட்டார்கள். அடி தாங்க முடியாமல் ஓடிய எனது கணவர் முனியம்மாள் வீட்டு பக்கத்திலேயே உள்ள வீட்டு அருகில் எதிரிகள் கும்பலாக மடக்கி எனது கணவரை செம அடி அடித்துவிட்டார்கள். அங்கிருந்தவர்கள் இங்கு வைத்து அடிக்காதிர்கள் என்று சொன்னார்கள். எனது கணவரின் விநாயகர் கோவிலுக்கு அருகில் உள்ள தண்ணீர் டேங்க் அருகில் இழுத்து சென்றார்கள். எனது கணவரை ஜட்டியுடன் நிற்க வைத்து தண்ணீரை ஊற்றி ஊற்றி 1 முதல் 4 எதிரிகள் அடித்தார்கள். முக்கியமாக எதிரி சரத்குமார் ஒரு பந்தை காலால் அடிப்பதை போல் எனது கணவரை மாறி மாறி அடித்தார்கள். ( சாட்சி கண் கழங்குகிறார்) கோபாலகிருஷ்ணன், பிரகாஷ் ஆகியோர் வந்து விலக்கிவிட முயற்சி செய்தார்கள். எல்லோரும் கூடுவதை பார்த்த எதிரிகள் ஆயுதங்களுடன் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். நான் ஆம்புலன்ஸ் வரவழைத்து எனது கணவரை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். எனது கணவர் மருததுவமனையில் எனது கணவர் சிகிச்சையில் இருக்கும்போது அவரிடம் விசாரித்தபோது எதிரிகளுக்கு பயந்து தான் திருக்கனூர், ஏரிக்கரையில் மறைந்து இருந்ததாக என்னிடம் சொன்னார். எனது கணவர் அங்கு இருப்பதை 1வது எதிரி சரத்குமார், 2 வது எதிரி சரவணன், ஆகியோர் சரத்குமாரின் இருசக்கரவாகனத்தில் அங்கு சென்று எனது கணவரை பிடித்து கொண்டு வந்து எங்கள் வீட்டு அருகில் வைத்து தாக்கியதாக சொன்னார். எனது கணவர் தாக்கப்பட்ட அன்று இரவு 1.00 மணிக்கு எனது கணவர் இறந்துவிட்டார். நான் காலையில் விக்ரவாண்டி காவல்

நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் அ.சா.ஆ. 1. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எதிரி சம்பவத்தின் போது பயன்படுத்திய ஆயுதங்களை என்னால் அடையாளம் காட்ட முடியும். 1வது எதிரி சரத்குமார் சம்பவத்தின்போது பயன்படுத்திய கட்டில் கால் என்னிடம் காட்டப்படுகிறது. அ.சா.பொ-1. சம்பவத்தின்போது 3 வது எதிரி குமாரவேல் பயன்படுத்திய கட்டை என்னிடம் காட்டப்படுகிறது. அது அ.சா.பொ.2. 2 வது எதிரி சரவணன் சம்பவத்தின்போது பயன்படுத்திய ஸ்பேனர் என்னிடம் காட்டடப்படுகிறது. அது அ.சா.பொ.3. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

புகாரை எனது மாமா இளையராஜா என்பவர் அவர் கைப்பட எழுதிக்கொடுத்தார். காவல்நிலையத்தில் வைத்து தான் புகார் எழுதினோம். நான் சொல்ல சொல்ல அவர் புகார் எழுதினார். புகாரை படித்துப்பார்த்து தான் நான் கையொப்பம் போட்டேன். புகார் கொடுக்க காவல்நிலையத்திற்கு நானும், என்னுடன் பிரகாஷ், கண்ணியப்பன், இளையராஜா, கோபாலகிருஷ்ணன், ஜெயகணேஷ், ராஜா ஆகியோரும் சென்றோம். கோபாலகிருஷ்ணன் எனது கணவரின் அக்காவின் மருமகன் ஆவார். பிரகாஷ் எனது கணவரின் அத்தை பிள்ளையின் பேரன் ஆவார். ஜெயகணேஷ் எனது உடன் பிறந்த அண்ணன், இளையராஜா எனது அம்மாவின் அப்புாவுடைய பங்காளி பிள்ளை மகன் ஆவார். அதனால் அவர் எனக்கு மாமா முறை. அவர் புதுவை மாநில திருப்புவனையை சேர்ந்தவர். ராஜா பண்ருட்டி கரும்பூரை சேர்ந்தவர். ஆனால், அவர்கள் சிவபெருமாள்பாளையத்தில் தான் குடியிருந்தார்கள். சிவபெருமாள்பாளை முகவரிக்கு தான ராஜாவுக்கு ஆதார் அட்டை ரேசன் கார்டு உள்ளது. கண்ணியப்பன் பக்கரிபாளையம் வழுதாவூரை சேர்ந்தவர். அவர் எனது கணவரின் பெரியம்மா பிள்ளை ஆவார். கண்ணியப்பன் காவலராக காவல் துறையில் பணியாற்றுகிறார். தற்போது அவர் வானுர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக இருக்கிறார் என்றால் சரிதான். அவர் இந்த வழக்கில் சாட்சியாக இல்லை என்றால் சரிதான், இன்று என்னுடன் நீதிமன்றம் அவர் வந்துள்ளார் என்றார் சரிதான். 25.4.2021ந் தேதி காலை சுமார் 9.30,

10.00மணியளவில் நான் எனது அண்ணனுடன் சிவபெருமாள்பாளையத்தில் உள்ள எனது கணவர் வீட்டிற்கு திரும்பி வந்தேன். புகார் மனு அ.சா.ஆ.1ல் அந்த விபரம் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்(புகாரை படித்துவிட்டு சாட்சி சொல்கிறார்). முனியம்மாள் வீடு பிள்ளையார் கோவிலிருந்து கிழக்கே சுமார் 150, 200மீ தூரம் தள்ளி உள்ளது என்றால் சரிதான். 3, 4 எதிரிகளின் வீடு முனியம்மாள் வீட்டிலிருந்து சுமார் 50மீ கிழக்கே சென்று அங்கிருந்து சுமார் 200மீ தெற்கே தள்ளி மேட்டுதெருவில் உள்ளது என்றால் சரிதான். 3, 4 எதிரிகளின் வீட்டிலிருந்து முனியம்மாள் வீட்டை பார்த்தால் தெரியாது என்றால் சரிதான். 22ந்தேதி சாயந்திரம் தான் எனது கணவர் வீட்டை விட்டு சென்றார் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். வேறு புகாரில் அதை எழுதினார்கள், 26ந்தேதி காலை 10.00மணிக்கு காவல்நிலையத்தில் வைத்து எழுதினோம். எனது கணவருக்கு மது குடிக்கும் பழக்கம் உள்ளது. அது தொடர்பாக எனது கணவருக்கும் எனக்கும் தகராறு வந்து நான் அடிக்கடி தாய் வீடு செல்வேன் என்றால் தகராறு வரும் அடிக்கடி தாய்வீடு செல்லமாட்டேன். 25ந்தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்புதான் நான் தாய் வீட்டிற்கு சென்றிருந்தேன். 22.4.2021ந்தேதி தான் எனது கணவர் தான் விஜயகுமாரியை தாக்கிய விபரத்தை எனது அண்ணனுக்கு போனில் சொல்லியுள்ளார். எனது அண்ணன் அன்று பகல் 1.00மணியளவில் எனக்கு தகவல் சொன்னார். ஆனால் எனது கணவர் விஜயகுமாரியை தாக்கிய போது எதிரிகள் எனது கணவரையும் தாக்கியதாக எதுவும் சொன்னாரா என்றால் இல்லை. 22ந் தேதி பகல் 1மணி வரை எனது கணவர் அந்த ஊரில் தான் இருந்துள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் விஜயகுமாரியை தாக்கியது குறித்து 2வது எதிரி சரவணன் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து விக்கிரவாண்டி காவல்நிலைய குற்ற எண்.215/2021 என்று குற்றவழக்கு பதிவானது என்றால் சரிதான். காவல்நிலையத்தில் புகார் கொடுத்தபிறகு எதிரிகள் எனது கணவரின்

சென்று விஜயகுமாரியை அடித்தது குறித்து கேட்கவில்லை என்றால் சரிதான். 22.4.2021 ந்தேதி நான் வீட்டிற்கு வந்தபிறகு தான் எனது கணவர் வீட்டை விட்டு போனார் என்றால் சரிதான். 22ந்தேதி இரவு எனது கணவர் திரும்பாததாலும் எனது பிள்ளைகளை எனது தாயார் வீட்டில் நான் ஏற்கனவே விட்டு வந்திருந்ததாலும் நான் எனது தாய் வீட்டிற்கு மீண்டும் சென்றேன். எனது கணவரை காணவில்லை என்று நான் விக்கிரவாண்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது கணவர் 3 நாட்களாக ஊருக்குள் வரவில்லை என்று நான் விசாரித்து தெரிந்துக்கொண்டேன். சம்பவத்தின்போது பகல் 12.00மணியளவில் சத்தம் கேட்டதாக நான் சொல்லியுள்ளேன். நான் கெங்கையம்மன் கோவில் தெருவில் உள்ள எனது கணவர் வீட்டில் இருக்கும்போது தான் கேட்டது. நான் முனியம்மாள் வீட்டிற்கு எதிரில் ' உள்ள ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து தங்கியிருந்தோம் என்று சொன்னால் 2 வீட்டிலும் தங்கி இருந்தோம். சம்பவ தினத்தன்று நான் முனியம்மாள் வீட்டிற்கு எதிரில் உள்ள வாடகை வீட்டில் தான் குடியிருந்தேன் என்றால் சரிதான். முனியம்மாள் வீட்டு அருகில் 4 எதிரிகளும் எனது கணவரை தாக்கியதாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். வேறு புகாரில் சொல்லியுள்ளேன். 1வது எதிரி சரத்குமார் அஞ்சாலாட்சி வீட்டிற்கு வெளியே இருந்து கட்டில் கால் எடுத்து வந்தார். அஞ்சாலாட்சி வீட்டில் டிராக்டர் நிறுத்தும் இடத்திலிருந்து ரோட்டு பக்கத்திலேயே கிடந்த கட்டில் காலை எடுத்து வந்தார். அந்த விபரம் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எந்த புகாரிலும் சொல்லவில்லை. எதிரி சரத்குமார் எனது கணவரின் தலையின் பின்புறத்தில் வலது புறம் அடித்தாரா அல்லது இடது புறம் அடித்தாரா என்றால் நடுவில் அடித்தார். எதிரி சரவணன் ஸ்பேனர் ஏ்ங்கிருந்து எடுத்துவந்தார் என்று எனக்கு தெரியாது. ஆனால் கையில் வைத்திருந்தார். அந்த விபரத்தை நான் 2 புகாரிலும் சொல்லவில்லை. எதிரி சரவணன் தாக்கியதில் பல் கொட்டியதாக சொல்லியுள்ளேன். மேல் வரிசையில் ஒரு

பல்லு உடைந்துவிட்டது. எனது கணவரின் இடது கையிலும் எதிரி சரவணன் அடித்தார். எதிரிகள் என்னை தாக்கவில்லை. ஆனால் தள்ளிவிட்டார்கள். 3,4 எதிரிகளை தள்ளிவிட்டதில் நான் கீழே விழுந்தேன். சிமெண்ட் ரோட்டில் விழுந்தேனா என்றால் ஆமாம். எனக்கு காயம்பட்டதா என்றால் இல்லை. அ.சா.ஆ.1 புகாரில் அந்த விபரம் சொல்லவில்லை, வேறு புகாரில் சொல்லியுள்ளேன். முனியம்மாள் வீட்டு அருகில் எனது கணவர் தாக்கப்படும் போது 12.00மணி இருக்கும். சுமார் 1மணி வரை அங்கு சண்டை நடந்தது. சம்பவ இடத்தில் கோபாலகிருஷ்ணன், பிரகாஷ் ஆகியோரும் இருந்தார்கள். இந்த முனியம்மாள் வீட்டு அருகில் நடந்த சம்பவத்தின் போது கோபாலகிருஷ்ணன், பிரகாஷ் இருந்ததாக அ.சா.ஆ.1 புகாரில் சொல்லவில்லை. வேறு புகாரில் சொல்லியுள்ளேன். எனது கணவர் முனியம்மாள் வீட்டிலிருந்து ஓடிய போது எதிரிகள் தாக்கியதாக அசா.ஆ.1 புகாரில் சொல்லவில்லை, வேறு புகாரில் சொல்லியுள்ளேன். இங்கு வைத்து அடிக்காதீங்க என்று அவ்வழியே வந்த ஊர்காரர்கள் சொன்னார்கள். பெயர் ஞாபகம் இல்லை. முனியம்மாள் வீட்டின் அருகில் 2வது சம்பவம் நடந்த நேரம் 2மணி முதல் 3மணி வரை இருக்கும். விநாயக்கோவில் அருகில் எனது கணவரை ஜட்டியோடு நிற்க வைத்து தண்ணீர் ஊற்றி ஊற்றி அடித்தார்கள் என்று அசா.ஆ.1 புகாரில் சொல்லவில்லை. என்றால் சரிதான். ' வேறு புகாரில் சொன்னேன். 1வது எதிரி சரத்குமார் எனது கணவரை காலால் பந்தை அடிப்பது போல் அடித்தார் என்று அசா.ஆ.1 புகாரில் சொல்லவில்லை. என்றால் சரிதான். ' வேறு புகாரிலும் சொல்லவில்லை. சாட்சி கோபாலகிருஷ்ணன், பிரகாஷ் ஆகியோர் விலக்கிவிட்டார்கள் என்று நான் சொன்னேன், அப்போது நேரம் மாலை 3.30மணி இருக்கும். இந்த வழக்கு தொடர்பாக என்னை 26ந்தேதி காவல்நிலையத்தில் வைத்து என்னை காலை 10.00மணியளவில் என்னை விசாரித்தார்கள். சாட்சி கோபாலகிருஷ்ணன், பிரகாஷ், ராஜா, ஜெயகணேஷ், இளையராஜா, துரை ஆகியோரையும் போலீசார் அப்போது விசாரித்தார்கள்.

யார் விசாரித்தார் என்றால் எஸ்ஐ ஒரு ˙முறை விசாரித்தார். அதன்பிறகு யாரும் என்னை விசாரிக்கவில்லை. நான் முதல்விசாரணையில் சொன்ன விபரங்களை அவரிடம் சொன்னேன். ஆம்புலன்சை எனது மாமா இளையராஜா போன் செய்து வரவழைத்தார். ஆம்புலன்ஸ் மாலை 4.00மணிக்கு வந்தது. அன்று 12மணி முதல் 4.00மணி வரை இடைப்பட்ட காலத்தில் காவல்நிலையத்திற்கு யாரோ தகவல் சொல்லியுள்ளார்கள். சிவபெருமான்பாளையத்திற்கு ஒரு ஏட்டு ஐயா மாலை 4, 4.30மணியளவில் வந்தார். ஆம்புலன்ஸ் வந்த பிறகு வந்தார். ஏட்டு ஐயா இருந்து தான் ஆம்புலன்ஸில் ஏற்றிவிட்டார் என்றால் சரிதான். எதாவது புகார் கொடுங்கள் என்று அவர் சொன்னாரா என்றால் இல்லை. எனது கணவரை விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு 5.00மணியளவில் கொண்டு சேர்த்தோம். எனது கணவர் சுயநினைவுடன் இருந்தார் என்றால் சரிதான், மருூததுவமனையில் மருத்துவர் என்னை பெயர் விசாலசம் கேட்டு விசாரித்து எழுதிக்கொண்டார் என்றால் சரிதான். நான் மருத்துவரிடம் எத்தனை நபர்கள், என்னென்ன ஆயுதங்கள் கொண்டு தாக்கினார்கள் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். காவலர் கண்ணியப்பன் மருத்துவமனை வந்தாரா என்றால் இல்லை. திருக்கனுர் ஏரிக்கரையில் மறைந்து இருந்ததாக எனது கணவர் என்னிடம் சொன்னதாக அ.சாஆ.1 புகாரில் நான் சொல்லவில்லை. வேறு புகாரில் சொன்னேன். எஸ்ஐ விசாரிக்கும் போது சொன்னேனா என்றால் சொன்னேன். 1,2 எதிரிகள் எனது கணவரை திருக்கனுர் ஏரிக்கரையில் இருந்து இருசக்கர வாகனத்தில் அழைத்து வந்ததாக எனது கணவர் தான் என்னிடம் சொன்னார். எனது கணவருக்கு ஏற்பட்ட காயங்கள் எதிரிகளால் ஏற்படுத்தப்பட்டவைகள் அல்ல என்றும் 22ந்தேதி காணாமல் சென்ற எனது கணவருக்கு எப்படியோ ஏற்பட்ட காயம் அடிப்படையில் ஏற்கனவே எனது கணவர் விஜயகுமாரியை தாக்கிய வழக்கு நிலுவையில் இருந்ததால் அந்த புகாருக்கு எதிரிகளை பழிவாங்கும்நோக்கில் நான் எனது உறவினருடன்

கலந்து ஆலோசனை செய்து காவலர் கண்ணியப்பன் உதவியுடன் பொய்யான புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எங்கள் ஊருக்கு அருகில் மண்ணாடிப்பட்டு ஊரில் உள்ள அரசு சுகாதார நிலையத்தில் அவசர மருத்துவ சிகிச்சைக்கு செல்வோம் என்றால் சரிதான். அந்த மருத்துவமனைக்கு எனது கணவரை அழைத்து சொல்லவில்லை. 25ந்தேதி என்னை எனது அண்ணன் எனது கணவர் வீட்டிற்கு அழைத்து வ்ந்ததாக நான் சொல்வது பொய் என்றும் எனது கணவர் அடிப்பட்டதாக தகவல் தெரிந்து எனது தாய் வீட்டிலிருந்து நேராக மருத்துவமனைக்கு தான் வந்தேன் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தின் போது எனது கணவருடன் இருந்திருந்தால், அவரை காப்பாற்றி உடனடியாக மருத்துவசிகிச்சை வழங்கி இருப்பேன் என்றும், எனது கணவருக்கு உரிய நேரத்தில் உரிய சிகிச்சை அளிக்கப்படாததாலும், வீட்டை விட்டு சென்று பசியால் வாடிய அசதி மற்றும் ரத்தப்போக்கினால் அவருக்கு மரணம் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியில்லை. எதிரிகளுக்கு பயந்துபோய் வெளியூரில் தங்கி இருந்த எனது கணுவருக்கு அடிப்பட்டது தெரிந்து ஏற்கனவே இருந்த முன்விரோரத்திற்காக எதிரிகளை பழிவாங்க எதிரிகளால் எனது கணவருக்கு மரணம் நிகழ்ந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>06.12.2022</u>

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 357/2021</u>

அ.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபாலகிருஷ்ணன் | சாதி | |
| த/பெ | ராதாகிருஷ்ணன் | மதம் | |
| கிராமம் | சிவபெருமான்பாளையம் | தொழில் | |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 38/2022 |
| மாவட்டம் | | தேதி | |

( 06.12.2022 ) இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் சிவபெருமான்பாளையம் வசித்து வருகிறேன், தட்சு ஆசாரி வேலை செய்கிறேன். அசா.1நதியா என்பவரை எனக்கு தெரியும் அவர் எனது மாமியாரின் தம்பி மனைவி ஆவார். அசா.1 கணவரான இவ்வழக்கில் இறந்த அய்யப்பனை எனக்கு தெரியும். ஆஜர் 1, 2,4 எதிரிகள் மற்றும் 3வது எதிரி குமாரவேல் ஆகியோரை எனக்கு தெரியும். 22.4.2021 ந்தேதி காலையில் அய்யப்பனுக்கும் 2வது எதிரி சரவணனுக்கும் அய்யப்பன் வீட்டு அருகில் உள்ள சரவணன் உடைய மாட்டுக்கொட்டை அருகில் காலை 7, 7.30மணியளவில் வாய் தகராறு நடந்தது. அதைப்பார்த்த நான் வேலைக்கு சென்றுவிட்டேன். ஏன் தகராறு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. சரவணனின் மனைவியை அய்யப்பன் அடித்துவிட்டார் என்று அன்று மாலை நான் வேலை முடித்துவரும்போது நான் கேள்விப்பட்டேன். ஆனால் அய்யப்பன் அவரது மனைவியை சந்தித்து சொல்லியுள்ளார். அதனால், அவர்கள் இருவருக்குள்ளும் தகராறு நடந்துள்ளது. அன்று இரவில் இருந்து அய்யப்பனை காணவில்லை. அய்யப்பனை தேடி அவரது

மனைவி அ.சா.1 தனது குழந்தைகளுடன் தனது தாய் வீட்டிற்கு சென்றுவிட்டார். அதன்பிறகு 25.4.2021ந்தேதி பகல் 12.00மணியளவில் எதிரிகள் சரத்குமார், சரவணன் ஆகியோர் அய்யப்பனை ஒரு பைக்கீள் அடித்து அழைத்து எங்கள் ஊருக்குள் வந்தார்கள். முனியம்மாள் என்பவரது வீட்டு அருகில் வைத்து ஒரு கடைந்த கட்டில் கால் கொண்டு 1வது எதிரி சரத்குமார் அய்யப்பனின் தலையில் அடித்தார். 2வது எதிரி சரவணன் ஒரு ஸ்பேனரை கொண்டு அய்யப்பனின் பல்லில் முதலில் அடித்தார். அதன்பிறகு, அய்யப்பனின் கையிலும், 2வது எதிரி சரவணன் அடித்தார். பைக்கீள் அய்யப்பனை எதிரிகள் அழைத்துவரும்போது பிள்ளையார்கோவில் இருந்த நான் அவர்களை தொடர்ந்து வந்தேன். அதனால், சம்பவத்தை நான் நேரில் `பார்த்தேன். 1,2 எதிரிகள் அய்யப்பனை தாக்கிய பிறகு 3வது எதிரி குமரவேல், 4வது எதிரி ஜானகி ஆகியோர் அங்கு வந்துவிட்டார்கள். அ.சா.1 நதியா கத்திக்கொண்டே ஒடி வந்தார். அவரை 3,4 எதிரிகள் வழிமறைத்து தள்ளிவிட்டார்கள். வலி பொறுக்கமுடியாமல் அய்யப்பன் அங்கிருந்து ஒடி பழனி வீட்டு அருகில் விழுந்தார். அங்கு எதிரிகள் 4பேரும் சேர்ந்து அய்யப்பனை அடித்தார்கள். அவர் மயக்கம் அடைந்துவிடாதப்படி அங்கு பிடித்து வைக்கப்பட்டீருந்த தண்ணீர் ஊற்றி அடித்ததார்கள். அங்கு இருந்தவர்கள் சத்தம் போட்டதால், 1,2 எதிரிகள் அய்யப்பனை தரதரவென்று ஜட்டியோடு இழுத்து பிள்ளையார் கோவில் வாட்டர் டேங்க் அருகில் அழைத்து சென்றார்கள். அங்கு வைத்தும் எதீரிகள் 4பேரும் அய்யப்பனை அடித்தார்கள். அப்போது நான் அவர்களை தடுத்துப்பார்த்தேன். முடியவில்லை. என்னை எதிரிகள் கெட்டவார்த்தைகளால் பேசியதால், அங்கிருந்து சென்று எனது நண்பர் பிரகாஷ் என்பவரை நான் அங்கு அழைத்து வந்தேன். அய்யப்பனின் மனைவி மற்றும் கும்பல் வந்ததாலும், எதிரிகள் ஆயுதங்களுடன் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். 108 ஆம்புலன்சிற்கு நாங்கள் போன் செய்தோம். யார் போன் செய்தார் என்று குறிப்பாக தெரியவில்லை. மாலை

4, 4.30மணியளவில் ஆம்புலன்ஸ் வந்தது. நான் ஆம்புலன்சீல் அய்யப்பனையும், அவரது மனைவியையும் அனுப்பிவிட்டேன். நான் ஒரு பங்ஸ்சனுக்கு சென்றுவிட்டேன். அன்றிரவு சுமார் 12.30மணியளவில் அ.சா.1 நதியா எனக்கு போன் செய்து அய்யப்பனுக்கு சிகிச்சை அளிக்கிறார்கள் என்று சொன்னார். ஆனால், இரவு 1.00மணியளவில் மீண்டும் போன் செய்து அ.சா.1 நதியா அய்யப்பன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 கட்டில் கால் சம்பவத்தில் 1வது எதிரி பயன்படுத்தியது ஆகும், அ.சா.பொ.2 ஸ்பேனர் சம்பவத்தில் 2வது எதிரி பயன்படுத்தியது ஆகும், அ.சா.பொ.3 கட்டை சம்பவத்தில் 3வது எதிரி பயன்படுத்தியது ஆகும், அ.சா.1 நதியா தகவல் சொன்னபிறகு அரை மணி நேரத்தில் நான் முண்டியம்பாக்கம் அரச மருத்துவமனை சென்று பார்த்தேன். அய்யப்பன் தாக்கப்பட்ட அன்று இரவு 8.30 மணியளவில் அ.சா.1 நதியா புகார் கொடுக்க விக்கிரவாண்டி காவல்நிலையம் சென்று வந்ததாக அன்று இரவில் போன் செய்யும் போது என்னிடம் சொன்னார். இந்த சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரித்தார்கள். விசாரித்த அதிகாரியின் பதிவி என்னவென்று எனக்கு தெரியாது. முதலில் ஒரு கான்ஸ்டபில் பைக்கீள் வந்து விசாரித்தார். அதன் பிறகு காரில் வந்தவர் என்னை விசாரித்தார். காரில் வந்தவர் எஸ்ஐ அல்லது இன்ஸ்பெக்டரா என்று எனக்கு தெரியாது. 26நதேதி காலையில் சிவபெருமான்பாளையத்திற்கு காரில் வந்தார்கள். 25.4.2021 ந்தேதி கான்ஸ்டபில் வந்தார். அவர் வந்த நேரம் என்னவென்றால், அன்று மாலை 4.30மணி. ஆம்புலன்சில் ஏற்றும்போதே வந்தார். ஆம்புலன்ஸ் அங்கு நிற்கும்போதே கான்ஸ்டபில் வந்தார். 26ந்தேதி காலை 8.00மணிக்கு காரில் வந்தார்கள். யாரோ தகவல் சொல்லி கான்ஸ்டபில் சம்பவன்று வந்துள்ளார். யார் எத்தனை மணிக்கு தகவல் சொல்லியுள்ளார் என்று எனக்கு தெரியாது. வந்த கான்ஸ்டபில் யாரையாவது விசாரீத்தாரா

என்றால் ராஜா, பிரகாஷ் ஆகியோரை விசாரித்தது தெரியும். அப்போது மாலை 4.45மணி இருக்கும். அ.சா.பொ.3 கட்டை பிள்ளையார் கோவில் எதிரில் கிடந்தது. கட்டையயை கான்ஸ்டபில் எடுத்ததாக நான் சொல்லவில்லை. பிள்ளையார் கோவில் அருகில் கட்டை கிடைந்ததை நான் பார்த்தேன். மற்ற பொருட்கள் எங்கிருந்து எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவதன்று பகல் 12.00மணியளவில் நான் பிள்ளையார் கோவில் அருகில் உட்கார்ந்து கொண்டிருந்ததாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. நான் பாண்டிச்சேரியில் தச்சர் வேலை செய்கிறேன், வழக்கமாக காலை 8.30மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டு சென்றுவிட்டு மாலை 7.30 மணயிளவில் வீடு திரும்புவேன். காரில் போலீசார் ஊருக்கு வந்ததை நான் நேரில் பார்க்கவில்லை. நான் அப்போது விக்கிரவாண்டி காவல்நிலையத்தில் இருந்தேன். கான்ஸ்டபில் விசாரித்தபிறகு யாரும் என்னை விசாரிக்கவில்லை. புகார் கொடுக்க அ.சா.1 நதியாவுடன் சென்றேனா என்றால் சென்றேன். நானும், ஜெயகணேஷ், பிரகாஷ், ராஜா கண்ணியப்பன் ஆகியோரும் சென்றோம். கண்ணிப்பன் எனக்கு சிறுவயது நண்பர். அவர் தற்சமயம் வானுர் காவல்நிலையத்தில் பணியாற்றுகிறார். 22ந்தேதி சரவணன் மனைவி விஜயகுமாரியை அடித்ததாக கூறப்படும் நேரம் எனக்கு தெரியாது. அன்று அசா.1 நதியா அவரது வீட்டில் இருந்தார். 22ந்தேதி நடந்ததாக கூறப்படும் பிரச்சனை குறித்து பிற்பாடு அசா.1 நதியாவுக்கும் , அய்யப்பனுக்கும், எதிரிகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் எதாவது பிரச்சனை நடந்ததா என்றால் இல்லை. சரவணன் மனைவி விஜயகுமாரியை அய்யப்பன் தாக்கியது சம்மந்தமாக அ.சா.1 நதியாவுக்கும், அவரது கணவர் அய்யப்பனுக்கும் அன்றிரவே தகராறு நடந்தது என்று போலீஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். 22ந்தேதி இரவு முதல் அய்யப்பன் காணவில்லை என்று போலீஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை. விஜயகுமாரியை அய்யப்பன் தாக்கியது குறித்து அன்றிரவு அய்யப்பன் மற்றும் அ.சா.1நதியா

ஆகியோரை விசாரித்தேனா என்றால் இல்லை. 23ந்தேதி அசா.1 நதியா அவரது தாய் வீட்டிற்கு தனது கணவரை தேடி சென்றார். தாய் வீடு சென்ற அசா.1 நதியாவிடம் அய்யப்பன் கிடைத்துவிட்டாரா என்று நான் 24ந்தேதி போன் செய்து கேட்டேன். அதற்கு அவர் அய்யப்பன் அங்கு வரவில்லை என்று சொன்னார். 25ந்தேதி காலை 9, 9.30மணியளவில் அசா.1 நதியா மீண்டும் ஊருக்கு வந்தார். அசா.1 நதியா முனியம்மாள் வீட்டு அருகில் உள்ள வாடகை வீட்டில் குடியிருந்தார் என்றால் சரிதான். அந்த வீடு பிள்ளையார் கோவில் தெருவில் உள்ளது என்றால் சரிதான். நான் பிள்ளையார்கோவில் தெருவிற்கு வடக்கே உள்ள கெங்கையம்மன் கோவில் அருகில் குடியிருக்கிறேன். 25ந்தேதி காலையில் அசா.1 நதியாவும், அவரது அண்ணனும் ஊருக்கு வருவதை மண்ணாடிப்பட்டு பேருந்து நிறுத்தம் வைத்து பார்த்தேன். அப்போது நேரம் காலை 9.10மணி. நான் மளிகை சாமான் வாங்க திருக்கனூர் செல்வதற்காக பைககீள் செல்வதற்கு அந்த பேருந்து நிறுத்தத்தில் அவர்களை பார்த்தேன், எங்கள் ஊரில் இருந்து திருக்கனூர் செல்ல திருக்கனூர் ஏரிக்கரையை பயன்படுத்துவோம் என்றால் சரிதான். ஆனால், நான் மண்ணாடிப்பட்டு வழியாகதான் சென்றேன். நான் திருக்கனூர் செல்லும்போது காலை 9.40மணி இருக்கும். நான் மளிகை சாமான் வாங்கீமுடிக்க அரை மணி ஆனது. பின்னர் நான் வீடு திரும்பிவிட்டேன். வீட்டை அடையும் போது காலை 10.20மணி. நான் உடனடியாக அ.சா.1 நதியாவை பார்த்து அய்யப்பன் வந்துவிட்டாரா என்று நேரில் விசாரித்தேனா என்றால் இல்லை. போனில் கேட்டேன். எனது வீட்டிற்கு பின்னாடி தான் அசா.1 நதியா வாடகைக்கு குடியிருந்து வீடு என்றால் சரியல்ல. எனது வீட்டில் இருந்து சுமார் 300மீ துரத்தில் உள்ளது. 1,2 எதிரிகள் அய்யப்பனை எங்கோ வைத்து அடித்து வண்டியில் அழைத்து வந்ததாக சொல்லியுள்ள நான் எங்கோ வைத்து அடித்ததை பார்த்தேனா என்றால் அடித்தததை நேரில் பார்க்கவில்லை. ஆனால், அய்யப்பன் ரத்தகாயத்துடன் இருந்ததாக சொல்லயுள்ளேன்.

வண்டியில் வரும்போதும் அய்யப்பனுக்கு காயம் இருந்தது. அதனை நான் பிள்ளையார்கோவில் தெரு முனியம்மாள் வீட்டு அருகில் நான் பார்த்தேன் அப்போது பகல் 12.10மணி. எதற்காக முனியம்மாள் வீட்டு அருகில் வந்தேன் என்றால் பிள்ளையார்கோவில் அருகில் இருந்தபோது எதிரிகள் அய்யப்பனை அழைத்துவருவதை பார்த்து முனியம்மாள் வீட்டு அருகில் வந்தேன். நான் வழக்கமாக பிள்ளையார்கோவில் அருகில் உட்காருவேன். சம்பவத்தன்று எனது 3. 1/2 மகனுடன் சும்மா உட்கார்ந்திருந்தேன். 11.30மணி முதல் அங்கு உட்கார்ந்திருந்தேன், இந்த விபரங்களை காவலரிடம் சொன்னேனா என்றால் இல்லை. கட்டில் காலை ஏ்ங்கிருந்து எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. பிள்ளையார் கோவிலிருந்து கிழேக்கே 100மீ தள்ளி முனியம்மாள் வீடு உள்ளது. திருக்கனுர் ஏரிக்கரையில் இருந்து வருகிறார்கள் என்று பிள்ளையார்கோவிலில் இருந்தே தெரிந்துகொள்ள முடியாது என்றால் சரிதான். எதிரி சரவணன் அய்யப்பனின் பல்லில் ஸ்பேனரால் அடித்தார். எந்த பக்கம் அடித்தார் என்று நான் பார்க்கவில்லை. அய்யப்பனின் எந்த கையில் அடித்தார் என்றால் வலது கையில் அடித்தார். அவ்வாறு அவரை அடிக்கும்போது பகல் 1, 1.30மணி இருக்கும். அப்போதே நான் தடுத்தேன். 1,2 எதிரிகள் என்னை அவதூராக பேசினார்கள், காவலரிடம் அதுப்பற்றி சொன்னேனா என்றால் இல்லை. எதிரிகள் அய்யப்பனை முனியம்மாள் வீட்டு அருகில் அழைதது வந்தபோது பிள்ளையார் கோவிலிருந்து நானும் வந்ததாக காவலரிடம் சொன்னேனா என்றால் இல்லை. முனியம்மாள் வீட்டு அருகில் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் 3,4 எதிரிகள் வரவில்லை என்றால் சரிதான். அசா.1 நதியா அவரது பழைய சொந்த வீட்டிலிருந்து தான் ஓடி வந்தார். ஏப்ரல் 2021 முதல் அச.1 நதியா முனியம்மாள் வீட்டு அருகில் உள்ள வாடகை வீட்டில் தான் இருந்தார் என்றால் சம்பவத்திற்கு முன்பாக 3 மாத காலமாக வாடகை வீட்டில் தான் குடும்பம் நடத்தினார். சம்பவம் நடந்த நேரத்தில் சாட்சி ஜெயகணேஷ் இருந்தாரா என்றால் அன்று மாலை

3.00மணியளவில் தான் வந்தார். அவரும் அவரது மனைவியும் வந்தார்கள். கத்திக்கொண்டே ஓடி வந்த அச.1 நதியாவை அவரது வாடகை வீட்டிற்கு பின்னால் வைத்து 3,4 எதிரிகள் வழிமறைத்து தள்ளிவிட்டார்கள். அந்த விபரத்தை காவலரிடம் நான் சொல்லவில்லை. பழனி வீட்டு அருகில் 1வது எதிரி சரத்குமார் அய்யப்பனின் முதுகில் கட்டில் காலால் அடித்தார். ஒரு சின்ன கட்டையை கொண்டு 2வது எதிரி அய்யப்பனை அடித்தார். அந்த சிறிய கட்டை நீதிமன்றத்தில் இல்லை. 3வது எதிரி அசா.பொ.3 கட்டையால் அய்யப்பனின் வலது காலில் முட்டிக்கு கீழே அடித்தார். 4வது எதிரி ஜானகியும் ஒரு கட்டையால் அய்யப்பனின் முதுகில் அடித்ததார். பழனி வீட்டு அருகில் வைத்து தான் தண்ணீர் ஊற்றி அடித்தார். ஜானகி தான் தண்ணீர் ஊற்றினார். பழனி வீட்டில் இருந்த ஒரு ஐக்கை எடுத்து தண்ணீர் எடுத்து ஊற்றினார். மயங்கி விழாதப்படி ஊற்றி அடித்தாக காவலரிடம் சொன்னேனா என்றால் அந்த காவலரிடம் சொல்லவில்லை. பழனி வீட்டிற்கு பின்புறம் உள்ள குண்டு வீடு என்று நாங்கள் சொல்லும் வீட்டு அம்மாளும், அவரது மருமகளும், ,இங்கு வைத்து அடிக்காதீர்கள் என்று எதிரிகளை திட்டினார்கள். அய்யப்பனை ஜட்டியோடு தரதரவென்று பழனி வீட்டு அருகில் இருந்து வாட்டர் டேங்க் அருகில் இழுத்து வந்தாக காவலரிடம் நான் சொன்னேனா என்றால் இல்லை. அவ்வாறு இழுத்து செல்லும்போது அய்யப்பனுக்கு காயம் ஏற்பட்டதா என்று எனக்கு தெரியாது . அது சிமெண்ட் சாலை, அது குண்டு குழியுமாக இருந்த என்றால் சரிதான். நான் அந்த விபரத்தை காவலரிடம் சொன்னேனா என்றால் காவலரிடம் சொல்லவில்லை விக்கிரவாண்டி காவல்நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தவர்களிடம் சொன்னேன், காலை 10.00மணிக்கு விசாரீத்தார்கள், பதவி தெரியாது. 1,2 எதிரிகள் திட்டியதால் தான் பிரகாஷை அழைத்து வந்தேன், அவர் கெங்கையம்மன் கோவிலில் இருந்தார். அவரை கூப்பிட்டு வரும்போது மாலை 4.00மணி. 108 ஆம்புலன்சிற்கு யார் போன் செய்தார் என்று எனக்கு தெரியாது. மாலை 4.30மணிக்கு ஆம்புலன்ஸ் வந்தது.

உடனே அய்யப்பனை ஏற்றினோம். ஊர் ஜனங்கள் கூடியிருந்தார்கள். அருகில் உள்ள மண்ணாடிபட்டு அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வருவதற்கு முன்பு அய்யப்பனை அழைத்து செல்ல முயற்சி செய்தோமா என்றால் முயற்சி செய்தோம் எதிரிகள் விடவில்லை. இந்த விபரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. சம்பவதன்று இரவு நான் வீட்டில் இருக்கும்போது நான் அ.சா.1 நதியா எனக்கு போன் செய்தார். நான் சொன்ன மாதிரி அய்யப்பன் எதிரிகளால் தாக்கப்படவில்லை என்றும், 22ந்தேதி சம்பவத்திற்கு பிறகு காணாமல் போன அய்யப்பன் வேறு எங்கோ அடிப்பட்டு காயம் அடைந்தார் என்றும், அதை பயன்படுத்தி ஏற்கனவே விஜயகுமாரியை அய்யப்பன் தாக்கியதால், அய்யப்பனுக்கு எதிராக எதிரிகள் தரப்பில் புகார் கொடுத்து வழக்கு இருந்ததால், அந்த வழக்கிற்கு எதிர் வழக்காக காவலர் கண்ணியப்பனால் எதிரிகளை பழிவாங்கும் நோக்கில் வழக்கு ஜோடிக்ப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பத்தின்போது நானும் அசா.1 நதியாவும் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் இருந்திருந்தால் அய்யப்பனுக்கு உடனடியாக சிகிச்சை வழங்கி உயிர் இழப்பை தடுத்திருக்கலாம் என்றால் சரியல்ல. அய்யப்பனுக்கு ஏற்பட்ட காயத்திற்கும் ஏதிரிகளுக்கு சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளை பழிவாங்கும் நோக்கில் காவல் துறையினர் சொல்லி நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.